சிவமயம்

திருக்கள்ளில்

தலவரலாறு




ஆனந்தவல்லி அம்பிகை

சமேத

ஸ்ரீசிவானந்தேச்வரர் திருக்கோயில்

திருக்கள்ளில்

(திருக்கண்டலம் - 601 103)



ஸ்ரீசுந்தர விநாயகர்



ஸ்ரீ பாலசுப்ரமணியர்

சிவமயம்

திருக்கள்ளில் தலவரலாறு

ஆசிரியர்
செவ்விலக்கிய செம்மல்
திருப்புகழ் தல ஆராய்ச்சித் திலகம், தொண்டர் மாமணி

வலையப்பேட்டை. ரா. கிருஷ்ணன்.



வெளியீடு

பெ.சு. சீனிவாசன்

எண். 34. வீரபத்திரன் தெரு - மயிலாப்பூர்.
சென்னை - 600 004.
தொலை பேசி எண் : 4991964

பதிப்பு : 1996

பதிப்பு குறிப்பு

நூலின்பெயர்	: திருக்கள்ளில் தலவரலாறு
முதற்பதிப்பு	: 1996
ஆசிரியர்	: வலையப்பேட்டை ரா. கிருஷ்ணன்
உரிமை	: ஆசிரியருக்கே
பயன்படுத்திய எழுத்துக்கள்	: தமிழ் 11 டிம்விளல்
வெளியீட்டாளர்	: பெ. சு. சீனிவாசன், சென்னை-4.

பொருளடக்கம்

உ
சிவமயம்

பதிப்புரை

நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெரு மானென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே

– திருமந்திரம்.

நாலு பேர் போன வழியிலே நாமும் போவோம்" என்றொரு பழமொழி நம் நாட்டில் உண்டு. அந்த நாலு பேர் யார்? அவர்களே சமயாச்சாரியர்களான நால்வர் . திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தர மூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசகர் எனப் போற்றப் படுபவர்கள். முதல் மூவர் பாடியவை தேவாரம் என்றும் மாணிக்கவாசகர் பாடியது திருவாசகம் என்றும் திருமுறைகளில் தொகுக்கப் பெற்றுள்ளன. தேவார ஆசிரியர்கள் மூவரும் பல திருத்தலங்களுக்குச் சென்று இறைவனைப் போற்றித்துதித்து பல அற்புதங்களை நிகழ்த்தி மக்களுக்கு பக்தி நெறியையும், வாழ்வு முறைகளையும் வளர்த்துள்ளார்கள். மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் வாழ்வில் பல திருத்தலங்களுக்குச் சென்று இறைவனை வழிபட்டு இன்பமாக வாழவேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்.

நம் நாட்டில் தேவாரப் பாடல் பெற்ற திருத்தலங்கள் 275 ஆகும்.

அவற்றில் தொண்டை நாட்டில் உள்ளவை 32 தலங்களாகும். அதில் **"திருக்கள்ளில்"** என்ற திருத்தலமும் ஒன்றாகும். இத்திருத்தலம் **திருஞானசம்பந்தரால்** போற்றிப் பாடப்பெற்ற திருத்தலமாகும்.

"இல்" என்ற சொல் இக்காலத்தில் பெரும்பாலும் மக்கள் வாழும் வீட்டைக் குறிப்பதாகும். சில பழமையான ஊர்ப்பெயர்களிலும் இச்சொல் சேர்ந்துள்ளது. திருச்சி அருகில் 'அன்பில்' 'திருப்பாச்சில்' என்னும் பாடல் பெற்ற தலங்கள் உள்ளன. 'திருச்செந்தில்' என்பது தற்போது திருச்செந்தூர் என்றும் வழங்கப்படுகிறது. 'மயிலாப்பில்' என்பது மயிலாப்பூர் என்றும் வெண்ணில், என்னும் ஊர் கோயில் வெண்ணி எனவும் 'இடைமருதில்' என்பது திருஇடைமருதூர் என்றும் 'புடை மருதில்' என்பது திருப்புடை மருதூர் ஆகவும் விளங்குகின்றன. தொண்டை நாட்டு இருபத்து நான்கு கோட்டங்களில் ஒன்றாகிய மணவிற் கோட்டத்தின் தலைநகர் 'மணவில்' என்பதாகும். அது தற்போது மணவூர் என அழைக்கப்படுகிறது.

"இல்" என்ற பெயருடைய சில ஊர்களில் பண்டைப் புலவர்கள் பெயரோடு இணைத்து சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. அரிசில் என்ற ஊரில் பிறந்தவர் அரிசில்கிழார் என்றும், அஞ்சில் என்னும் ஊரில் பிறந்தவர் அஞ்சில் ஆந்தையார் என்றும், பொருந்தில் என்ற ஊரைச் சேர்ந்தவர் பொருந்தில் இளங்கீரனார் என்றும் குறிக்கப்பெற்றனர்.

திருஞானசம்பந்தரின் தேவாரப் பாடல் பெற்ற இத்திருத்தலமான **கள்ளில்** என்ற ஊரில் பிறந்தவர் தான் **கள்ளில் ஆத்திரையர்** என்னும் சங்ககாலப்புலவர், சங்க இலக்கியங்களான குறுந்தொகையில் ஒரு பாடலும் புறநானூற்றில் இரண்டு பாடலும் இப்புலவரால் பாடப் பெற்றுள்ளது. மிகப்பழமையான இத்திருத்தலத்தில் **சிவாநந்தேச்வரரும், ஆனந்தவல்லியம்மையும்** அருளாட்சி செய்கிறார்கள். திருக்குளம் **சிவானந்த தீர்த்தமாகும்.** எல்லாம் ஆனந்தமயமாக விளங்கும் இத்தலத்தை வழிபட்டோர் ஆனந்தமான வாழ்வைப் பெறுவர் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? மேலும் பிருகு முனிவர்க்கு சக்தி தட்சிணாமூர்த்தியாகவும் அகத்திய முனிவர்க்கு சோமாஸ்கந்தராகவும் சிவா நந்தேச்வரர் காட்சியளித்த அற்புதமான இறைவர். திருக்கள்ளில் ஈச்வரர் என்பதும் அரிய செய்தியாகும்.

இத்தனைச் சிறப்புகள் கொண்ட இத்தலத்தில் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் திருப்பணி நிறைவு பெற்று கும்பாபிஷேகம் நடத்த பக்தர்கள் தங்களால் இயன்ற பொருளுதவி செய்து சிவானந்தப் பெருமான் ஆனந்தவல்லியம்மையின் திருவருளைப் பெற

வேண்டுகிறோம். இத்தலவரலாற்று நூலை அச்சிட்டு வெளியிடும் பேறு பெற்றவர் மயிலாப்பூர் திரு. பெ.சு. சீனிவாசன் அவர்கள், வம்ச பரம்பரையாக இறைபணியில் அர்ப்பணித்துக் கொண்டுள்ள பெருமைக்குரிய குடும்பத்தினைச் சேர்ந்தவர். மயிலை லஸ் அருகில், சமஸ்கிருதக் கல்லூரிக்கும், திருவள்ளுவர் சிலைக்கும் பக்கத்திலுள்ள, புராதனமான ஸ்ரீ ஆஞ்சநேயர் திருக்கோயிலின் சிறந்த நிர்வாகத் தலைவராகவும், இன்னும் சென்னை தங்கசாலைத்தெரு ஸ்ரீ ஏகாம்பரேச்வரர் திருக்கோயில் இறைபணி மன்ற குழுவிலும், திருக்கோயில் கும்பாபிஷேகக் குழுவிலும், மற்றும் சின்னம்பேடு என வழங்கும் சிறுவாபுரி ஸ்ரீ பாலசுப்ரமண்ய சுவாமி திருக்கோயில் கும்பாபிஷேகம் ஆகிய திருப்பணிகளில் பெருமளவில் பங்கு கொண்டு அரும் பணியாற்றி ஆன்மிகத்தொண்டு செய்தவராவார். தற்போது இவர் திருக்கள்ளில் திருப்பணியிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு ஒவ்வொரு பிரதோஷத்திற்கும் சிறப்பாக வழிபாடு நடைபெற ஆவன செய்து வருகிறார்கள். ரிஷப வாகனத்தைச் செப்பனிட்டு பிரதோஷத்தன்று சுவாமி புறப்பாட்டிற்கும் ஏற்பாடு செய்துள்ளார். இத்தகைய ஆன்மிகச் செம்மலே இந்நூலை அச்சிட்டு சிவநேயச் செல்வர்களுக்கு வழங்குகிறார்கள். நாம் அனைவரும் கூட இத்திருப்பணியில் பங்கு கொண்டு **ஸ்ரீசிவாநந்தேச்வரர் ஸ்ரீஆனந்தவல்லியம்மையின்** திருவருளைப் பெற்று இன்புறுவோமாக.

- வலையப்பேட்டை ரா. கிருஷ்ணன்

எண். 5, டாக்டர் பெசண்ட் ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை 600 005.
தொலைபேசி : 844 468.



நுழைவாயில்

தமது உள்ளத்தில் மனிதன் கட்டும் மாளிகைக்குத் தூய்மை. நல்லறிவு. இரக்கம். அன்பு ஆகிய நான்கும் சுவர்களாக அமைய வேண்டும். அமைதி அதன் கூரை. நம்பிக்கை அதன் தளம். இறைவழிபாடு அதன் வாயில். அருள் அதனுள் வீசும் காற்று. ஆனந்தம் அங்கு நிகழும் இசை. இத்தகைய அருமையான இன்ப நில்லியிலேயே மனிதன் என்றும் திளைக்க நமது முன்னோர்கள் அமைத்த அருள் நிலையங்களே நமது திருக்கோயில்களாகும்.

நம்மைப்படைத்துக் காத்து. நீக்கி. மறைத்து. அருளும் ஐவகைச் செயல்களையும் அருளாடலாகக் கொண்ட பரம்பொருளை. பேராயிரம் பரவி. வானோர் ஏத்தும் பெருமானாக விளங்கும் ஒரு நாமம் ஒரு உருவம் ஒன்றுமில்லா ஒப்பற்ற உயர் சக்தியைப் பல பேரிட்டு. பல தலங்களிலும் பல வடிவங்களில் வணங்கிய நம் முன்னோர். தம் அறநெறி வாழ்வு நம் வாழ்வை விடப் பன்மடங்கு பெருமை நிறைந்ததாக விளங்கியதை இன்றும் நின்று விளக்கிக் காட்டுவன. நமது திருக்கோயில்கள்.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" எனவும். ஆலயம் தொழுவது சாலவும் நன்று" எனவும் "நம் பெரியோர்கள் உறுதிபூண்டொழுகினர். புறத்திலே பெருங்கோயில்களை அமைத்து அதிலே பெரிதும் ஈடுபடுவதன் மூலம் அகத்திலே இறைவனை இருத்திக் கோயிலமைத்துப் போற்றினர். உயிர் நிலைக்க உடம்பு அவசியம் என்பதைப் போல் இறைவழிபாட்டிற்குக் கோயில்கள் அவசியம் என்று கண்டுணர்ந்ததனாலேயே நம் தமிழ் நாட்டில் கோயிலில்லாத எந்த ஊரும் இல்லை என்றபடி அவர்களது பரந்த உள்ளம் போலவே எங்கும் கோயில்களை பெரியதாகவும். சிறப்புடையதாகவும் அமைத்து நாமும் அப்பேறுபெற விட்டுச் சென்றுள்ளனர். இறைவன் எல்லோர்க்கும். எல்லா உயிர்களுக்கும் பொதுவானவன். ஆதலால் உயர்ந்த முனிவர். தேவர் முதல் ஓரறிவு உடைய உயிர்வரை எல்லோரும். எல்லாமும் வணங்கி. வழிபட்டு பேறுபெற்ற செய்திகளை தலபுராணங்கள் உரைக்கின்றன. தலந்தோறும் கோயில் கொண்ட இறைவன் அருள்திறம் வெவ்வேறு வகையாகப்

பேசப்பட்டுள்ளன. தலத்தில் உடல் தூய்மையும். நலமும் பெறும் பொருட்டுச் தீர்த்தங்கள் அமைந்தன. இவற்றில் நீராடினால் உடல் மட்டுமின்றி. மனம் தூய்மையடையும். எல்லா நலன்களும் உண்டாகும் என்று நம்பிக்கை கிடைத்தது. இவ்வாறு நாடெங்கும் **மூர்த்தி, தலம், தீர்த்தம்** எனச் சிறப்புகள் மிகுந்து. பக்திப்பரவசத்தின் பெருக்கமும். அருளாளர்களின் அவதாரங்களும் தென்னகத்தையே **கைலாயமாகவும், வைகுந்தமாகவும்** ஆக்கின.

நாயன்மார்களும் ஆழ்வார்களும் பாதம் பதிந்த நம் தென்னகத்தில் அவர்களது அருட்பாடல்களால் பெருமை பெற்ற திருத்தலங்கள் பல. சோழநாடு. நடுநாடு. தொண்டைநாடு. துளுவநாடு. ஈழநாடு. வடநாடு என நாட்டுவகையாகப் பாடல் பெற்ற திருத்தலங்களைப் பிரித்திருக்கின்றனர்.

தொண்டை நாட்டில் தேவாரப்பாடல் பெற்ற திருத்தலங்கள் 32 ஆகும். காஞ்சியில் காமாட்சியம்மை 32 அறம் வளர்த்தாள் என்று சிறப்பாகக் கூறுவது போல் 32 தேவாரத்தலங்களும் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த 32 தேவாரத் தலங்களில் திருஞானசம்பந்தரின் தேவாரப்பாடல் பெற்ற **"திருக்கள்ளில்"** என்னும். இத்திருத்தலம் குசஸ்தலை ஆற்றங்கரையில் நீர்வளம். நிலவளம் மிகுந்து வயல்களும். வாழையும். பூஞ்சோலையும் பொழில்களும் நிறைந்து அழகாகத் திகழ்கின்றது. இத்தகைய சிறப்பு பெற்ற சிவஸ்தலத்தை அறிந்து கொள்ள சிவநேயச் செம்மல்கள் அனைவரும் செல்வோம் வாருங்கள்: சென்று சிறப்பான திருப்பணி ஒன்றை செய்வோம் வாருங்கள் என அழைத்து வணங்கும் ஓர் ஆன்மிகத் தொண்டன்.

திருமயிலாப்பூர்,

- பெருங்குடி. சுந்தரம் சீனிவாசன்.



திருக்கள்ளில்

இருப்பிடம்

சென்னையிலிருந்து 40 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள இத்தலம் தற்போது **"திருக்கண்டலம்"** என்றழைக்கப் படுகிறது. சென்னையிலிருந்து செங்குன்றம், சோழவரம், காரனோடை வழியாக குசஸ்தலை ஆற்றைக் கடந்து பெரியபாளையம் செல்லும் சாலையில் "கன்னிப்புத்தூர்" எனப்படும் கன்னிகைப் பேர் சென்று அங்கிருந்து நான்கு கிலோ மீட்டர்கள் தெற்கு நோக்கி சென்றால் இவ்வூரை அடையலாம். திருவள்ளூரிலிருந்து தாமரைப்பாக்கம் வழியாக பெரியபாளையம் செல்லும் சாலையில் வெங்கல் என்ற ஊரிலிருந்து கன்னிகைப்பேர் செல்லும் சாலையில் வலப்புறம் திரும்பி 10 கிலோ மீட்டர் சென்றாலும் திருக்கண்டலம் என்னும் திருக்கள்ளிலை அடையலாம்.

சென்னை பிராட்வே பஸ் நிலையத்திலிருந்து திருக்கண்டலம் செல்ல 58 என்ற பஸ் (காலை 6.15, 9.15, பகல் 2.15 மாலை 7.15) செல்கிறது. 92, 123, 124, 125 என்ற எண்ணுள்ள பஸ்கள் கன்னிகைப்பேர் வழியாகச் செல்கின்றன. அங்கே இறங்கி நான்கு கிலோ மீட்டர் சென்றால் இவ்வூரை அடையலாம்.

இத்தலத்தைச் சுற்றி வெங்கல், வடமதுரை, பஞ்சேஷ்டி, சிறுவாபுரி (சின்னம்பெடு) ஆண்டார்குப்பம், ஞாயிறு, அலமாதி ஆகிய தலங்கள் உள்ளன.

தலவிருட்சம் (தலமரம்)

மிக பழைமையான காலத்தே நம் முன்னோர்கள் கானகத்தை இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்தனர். அப்போது இறைவனது உருவத்தை மரத்தடியில் எழுந்தருளச் செய்து வழிபட்டனர். பின்னர் நாகரீக வளர்ச்சிகளில் காடு அழித்து நாடாக்கப்பட்ட பின் இறை உருவங்களுக்கு பெருங்கோயில்கள் அமைக்கப்பட்டன. இவ்வாறு கோயில்கள் அமைக்கப்பட்ட போதிலும் ஆதியில் இருந்த மரத்தினை அழிக்காது அதனை இன்றளவும் சுவாமிக்கு அருகில் **தலவிருட்சம் (தலமரம்)** என்ற பெயரில் வளர்த்து வருகின்றனர். அவ்வகையில் இத்தலத்தில் ஆதிமரம் **"கள்ளி"** யாகும். அபூர்வமான கோட்டுப்பூவகையைச் சார்ந்த 'கப்பலறி' என்ற இக்கள்ளி மரத்தடியில் இறைவன் எழுந்தருளியிருந்ததால் எம்பெருமான் **திருக்கள்ளில் நாதர்** என்றும் **திருக்கள்ளீச்வரர்** என்றும் அழைக்கப் பெறுகிறார். ப்ருகு முனிவர் கள்ளிப்பூ மலரால் வழிபட்டு பேறுபெற்றதைத் தலபுராணம் சிறப்பாக எடுத்துக் கூறுகின்றது.

தீர்த்தம்

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றினுள், தீர்த்தம் என்பது நம் நாட்டில் விளங்கும் பலப்பல கிணறு, குளம், ஆறு, கடல்துறை இவையாவும் சிவமாம் தன்மைபெற்று, நீராடும் அன்பர்களது உடற்பிணியையும் பிறவிப்பிணியையும் போக்குகின்றன. அப்பர் பெருமான் "சென்றாடு தீர்த்தங்கள் ஆனார்தாமே" என்று போற்றுகின்றார். இத்தலத்தில் உள்ள திருக்குளம் நந்தி தீர்த்தம் என்றழைக்கப் படுகிறது. மிகவும் புனிதமான கங்கைக்கு நிகரானது என்று பெரியோர்கள் போற்றுவார்கள். ஐப்பசி பௌர்ணமியில் சிவானந்தேச்வரருக்கு அன்னாபிஷேகம் நடைபெறுகின்றது. அவரது சிரசில் வைத்த அன்னத்தை மட்டும் வீதிவலம் எடுத்து வந்து நந்தி தீர்த்தத்தில் கரைத்துவிடுவது வழக்கம். இது கங்கையில் அன்னத்தை இடுவது போன்றது என்பது ஐதீகம்.

கோயில் அமைப்பு

திருக்கோயில் முன்புறம் அழகான திருக்குளம் "நந்திதீர்த்தம்" என்றழைக்கப்படுகிறது. ராஜகோபுரம் இனிமேல்தான் உருவாக வேண்டும். கோயிலினுள் நுழைந்தவுடன் இடது கோடியில் தலவிநாயகர் சன்னதி அமைந்துள்ளது. "சுந்தர விநாயகர்" என்ற திருப்பெயருடன் கம்பீரமாக காட்சியளிக்கிறார். அவருக்கு அருகில் காளத்தீச்வரர் சந்நிதி உள்ளது. மூலவர் திருக்கள்ளில் நாதர் தம்மை வழிபடும் உயிர்கட்கெல்லாம் ★ சிவானந்தேச்வரர் என்னும் பெயரைக் கொண்டுள்ளது அற்புதமாக உள்ளது. மூலவர் திருச்சுற்றில் கல்வெட்டுக்கள் நிறைய உள்ளன. விமானம் சோழர் கால பாணியில் 'கஜப்ருஷ்ட' அமைப்பில் யானை படுத்திருப்பது போல் அமைந்துள்ள அழகு கண்டு இன்புறத் தக்கது.

சுவாமிக்கு அருகில் கிழக்கு நோக்கி **பாலசுப்ரமண்யர்** சந்நிதி அமைந்துள்ளது. இவர் பிரம்மசாஸ்தா வடிவில் நான்கு கரங்கள் கொண்டு நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். முன் இருகரங்களில் ஒன்று அபயமாகவும் மற்றொன்று குரங்கத்திலும் (இடுப்பிலும்) பின் இருகரங்களில் ஜபமாலையும். கமண்டலமும் கொண்டு விளங்குகிறார். தொண்டை மண்டலத்தில் அமைந்துள்ள பெரும்பாலான பழைமையான திருக்கோயில்களில் பிரமசாத்தனாக முருகப்பெருமான் காட்சியளிப்பது குறிப்பிடத்தக்கது.

பாலசுப்ரமணியர் சந்நிதி அருகில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது அன்னை ★ ஆனந்தவல்லியின் அற்புதக் கோலம். "ஆனந்தமாய் என் அறிவாய் நிறைந்த அமுதமாய் வானந்தமான வடிவுடையாள்" நின்ற கோலத்தில் அன்பர்களுக்கு ஆனந்தத்தை அருளும் எழிற்கோலம்.

★ தேவாரப்பாடல் பெற்ற பேணு பெருந்துறை என்ற திருத்தலத்திலும் இறைவன் சிவானந்தேச்வரர் என்ற திருநாமத்துடன் திகழ்கிறார்.

★ தேவாரப்பாடல் பெற்ற திருத்தலங்கள் 275ல் ஆனந்தவல்லி என்ற திருநாமத்துடன் இறைவி அருளாட்சி செய்யும் ஒரே தலம் திருக்கள்ளில் தான். திருக்கோவிலூர் என்னும் பாடல் பெற்ற பதியில் அம்பிகையின் திருநாமம் சிவானந்தவல்லி என்பதாகும்.

★ இத்தலத்தைச் சுற்றியுள்ள பல தலங்களிலும் அம்பிகையின் திருநாமம் ஆனந்தவல்லி என்று அமைந்துள்ளது சிறப்பாகும். அவை சோழவரம், புலியூர், பழவேற்காடு, சிறுவாபுரி (சின்னம்பெடு), பஞ்சேஷ்டி, கும்மங்கலம், வஞ்சிவாக்கம், புதுவாயில், வடமதுரை முதலியன. மேற்கண்ட தலங்கள் அனைத்தினுக்கும் முதன்மையான ஆனந்தவல்லி திருக்கள்ளில் திருக்கோயிலில் அருட்காட்சிதரும் ஆனந்தவல்லியே என்பது குறிப்பிடத்தக்கது.

சிவானந்ததேச்வரர் சந்நிதியை சுற்றி வரும் போது சண்டி கேச்வரர் சந்நிதி அமைந்துள்ளது. சண்டிகேசுவரரின் சிலை மிக அழகான வடிவில் அமைந்துள்ளது. பிரகாரத்தில் தெற்கு நோக்கி பைரவர். மேற்கு நோக்கி சூரியன் தென் கிழக்கு மூலையில் கிழக்கு நோக்கி நாகர் சந்நிதி ஆகியவை அமைந்துள்ளன. நந்தி. பலிபீடம் முதலியன உள்ளன, கொடிமரம் தற்போது இல்லை.

உற்சவ மூர்த்திகளின் படிமங்களில் ப்ரபையுடன் கூடிய விநாயகர், சோமாஸ்கந்தர், தனி அம்மன், பிரதோஷ விநாயகர், பிரபையுடன் கூடிய சந்திரசேகரர் அம்பிகையுடன் அமர்ந்தகோலமும் செல்லியம்மன் (கிராம தேவதை கோயில்) திருக்கோலமும் அற்புதமாக உள்ளன.

சோமாஸ்கந்த வடிவம்

மூலவர் திருக்கள்ளில் நாதர் சிவானந்தேச்வரர் சந்நிதிக்கும், உயிர்களுக்கு ஆனந்தம் அளிக்கும் ஆனந்தவல்லி அம்பிகை சந்நிதிக்கும் இடையில் அமைந்துள்ளது பாலசுப்ரமண்யர் சந்நிதி. இவை மூன்றும் ஒரே வரிசையில் கிழக்கு நோக்கி இருக்கும் கோலம் அருமையாகவும் விசேஷமாகவும் அமைந்ததாகும்.

மகேச்வர வடிவங்களில் முதன்மையானதும், மக்களுக்கு வேண்டுவனவற்றை வேண்டியாங்கு தரும் போக மூர்த்தியாவதும். சிவாலயத்தில் தனி ஆட்சி செலுத்தித் தேரில் பவனி வந்து விழாக்கோலம் கொள்ளும் மூர்த்தியாவதும், சச்சிதானந்த வடிவமாகிய சோமாஸ்கந்த மூர்த்தமேயாகும்.

இந்த வடிவ விளக்கம்		
சோ	ஸ்கந்த	உமா
சிவானந்தர்	பாலசுப்ரமண்யர்	ஆனந்தவல்லி
சத்து	ஆனந்தம்	சித்து
அருள்	ஆன்மா	இன்பம்
உண்மை	மகிழ்ச்சி	அறிவு
சிவ.1	ய.3	சிவ.2

இந்த சோமாஸ்கந்த அமைப்பில் இம்மூன்று சந்நிதிகளும் அமைந்து. தரிசிப்பவர்களுக்கு சிவானந்தத்தையும். கற்பக விருட்சம் போன்ற யோக மிக்க வாழ்வுப் பேற்றையும் வழங்கும் தலமாக விளங்குகின்றது.

வழிபட்டோர்

ப்ருகு முனிவர் வழிபட்டது*

ப்ருகு முனிவர் தமது யாத்திரையில் திருப்பருப்பதம் (ஸ்ரீ சைலம்) திருக்காளத்தி. வாரணவதம் ஆகிய தலங்களை தரிசித்து கொண்டு வரும் வழியில் திருக்கள்ளில் தலத்திற்கு வருகிறார். அங்கு நந்தி தீர்த்தத்தில் நீராடி சிவாநந்தேச்வரரை ஆயிரம் கள்ளி மலரால் பூசித்து வழிபாடு செய்து தவமியற்றினார். இறைவன் அம்பிகையோடு தக்ஷிணாமூர்த்தி கோலத்தில் அவருக்குக் காட்சியளித்து உபதேசம் செய்கிறார். உபதேசமும் வரமும் பெற்ற ப்ருகு முனிவர் "இந்தக் திருக்கள்ளில் தலத்தில் இத்திருக்குளத்தில் வியாழக்கிழமையில் நீராடிக். கள்ளிமலர் கொண்டு குரு ஹோரையில் உம்மை சக்தி தக்ஷிணாமூர்த்தியாக (தக்ஷிணாமூர்த்தி யுடன் சக்தி அமர்ந்த. கோலமாக) பூசித்து வழிபாடு செய்பவர்களுக்கு பசியும். வறுமையும் நீங்கி. செல்வமும். ஞானமும் பெருகி எண்ணிய எண்ணமெல்லாம் கைகூடும்" என அனைவருக்கும் ஆசி வழங்குகிறார். பிறகு ப்ருகு முனிவர் அங்கிருந்து புறப்பட்டு வடதிருமுல்லைவாயில் சென்று வழிபட்டு பேறு பெற்றதாகப் புராணம் எடுத்துக் கூறுகிறது.

அகத்தியர் வழிபட்டது

திருக்கயிலையில் பார்வதியின் திருக்கல்யாணத்திற்கு எல்லா தேவர் பெருமக்களும். முனிவர்களும் திரண்டு வந்தனர். அதனால் வடக்குப்பகுதி தாழ்வாகவும் தெற்குப் பகுதி மேலெழும் நிலை ஏற்பட்டது. சிவபிரான் அகத்திய முனிவரை அழைத்து தெற்குப்பகுதிக்குச் சென்று சமன் செய்யுமாறு ஆக்ஞையிட்டார். அகத்திய முனிவர் சிவபிரான் ஆணையின்படி தெற்கில் பல தலங்களை வ்ழிபட்டு வரும்போது ஆரணியாற்றங்கரையில் அரியதுறை. திருப்பாலைவனம் முதலான தலங்களை தரிசித்து பஞ்சேஷ்டி என்னும் தலத்திற்கு வருகிறார். அங்கு இறைவனை பூசித்து ஐந்து யாகங்களைச் செய்கிறார். (பஞ்ச என்றால் ஐந்து இஷ்டி என்றால் யாகம்). அன்றிரவு கனவில் இறைவன் சோமாஸ்கந்த மூர்த்தியாகக் காட்சியளித்து அவரை திருக்கள்ளில் அழைக்க. அகத்திய முனிவர் இத்தலத்திற்கு வருகிறார். இங்கு வந்த போது கோயிலே சோமாஸ்கந்த வடிவத்தில் அமைந்துள்ளது கண்டு வியப்பும். மகிழ்ச்சியும்

* ப்ருகு முனிவர் பூசித்த மற்றொரு திருதலம் ஸ்ரீலங்காவிலுள்ள திருச்கேதீச்சரம்.




ஸ்ரீசிவாநந்தேச்வரர்



ஸ்ரீ ஆனந்தவல்லியம்மை



ஸ்ரீ சண்டிகேஸ்வரர்



ஸ்ரீ நந்திகேச்வரர்

அடைந்து திருக்குளத்தில் நீராடி ஒரு மண்டலம் திருக்கள்ளில் பெருமானை வழிபட்டுப் பேறு பெற்றார். அகத்தியருக்கு பார்வதி திருக்கல்யாணக் காட்சியை காண வில்லையே என்ற குறையை நீக்கிக் காட்சி கொடுத்து சிவஆனந்தத்தை கொடுத்ததால் சுவாமி சிவானந்தேச்வரர் என்றும் அம்பிகை ஆனந்தவல்லி என்றும் அழைக்கப்பெறுகிறார்கள். இவ்வரலாறு அகத்திய புராணத்தில் காணப்பெறுகிறது.

குசர்-லவர் பூசித்தது

இராமபிரானது திருக்குமாரர்கள் வான்மீகி ஆசிரமத்தில் வசித்து வரும் நாளில், அச்வமேதயாகம் செய்ய இராமபிரான் விட்ட குதிரையை குசனும், லவனும் தடுத்து நிறுத்துகிறார்கள். இராமபிரான் லட்சுமணனை அனுப்பி சிறுவர்களிடமிருந்து குதிரையை மீட்டு வரச்சொல்கிறார். லட்சுமணனுக்கும் சிறுவர்களுக்கும் போர் நடைபெற்று லட்சுமணன் தோல்வியுறுகிறார். இதனை அறிந்த இராமபிரான் தாமே நேரில் வந்து சிறுவர்களான குசன், லவன் இருவருடன் யானைப்படை, குதிரைப்படை முதலிய படை கொண்டு போரிட்டு தோல்வியுறுகிறார். சிறுவர்கள் இராம பிரானுடன் போரிட்டு வெற்றி பெற்ற இடம் சிறுவரம்பேடு என்றும் சிறுவர்புரி என்றும் அழைக்கப்படுகிறது. சிறுவர் அம்பு எடுத்ததால் * **சிறுவரம்பெடு** என்ற பெயரில் திருக்கள்ளில் தலத்திற்கு வடக்கே பத்து கிலோ மீட்டரில் சிறப்பாக உள்ளது. குசலவர்கள் சிறுவாபுரியிலிருந்து திருக்கள்ளில் தலத்திற்கு வந்து இங்குள்ள ஆற்றில் நீராடி முறைப்படி சிவானந்தேச்வரரையும் ஆனந்தவல்லியையும் பூசித்து வழிபட்டு பேறு பெற்றார்கள். சிறுவர்கள் நீராடி வழிபட்ட ஆறு தற்போது **குசஸ்தலை ஆறு** என்று வழங்கப் பெறுகிறது.

திருஞானசம்பந்தர் வழிபட்டது

திருஞானசம்பந்தர் திருவாலங்காட்டீசனை தரிசித்து பதிகம்பாடி, திருப்பாசூர், திருவெண்பாக்கம் முதலான தலங்களைத் தரிசித்து

* (இத்தலத்திலுள்ள பாலசுப்ரமண்யர் திருக்கோயில் அருணகிரிநாதரால் திருப்புகழில் அற்புதமாக போற்றப்படுகிறது. இத்தலத்திருப்புகழைப் பாராயணம் செய்து சிறுவாபுரி முருகனை தரிசிப்போர் சொந்த வீட்டில் இன்பமாகப் குடியேறலாம். உலகெங்கிலும் காண இயலாத கவின் பெறுவடிவமான வள்ளி கல்யாண சுந்தரரை இங்கு தரிசித்து திருமணங்கள் உரிய காலத்தில் கைகூடி இன்பமயமான இல்லறவாழ்வுப் பேறு பெறலாம்).

தேவாரப்பதிகங்கள் பாடிப்பரவி அங்கிருந்து பல பதிகளைப் பணிந்து வரும் வழியில் திருக்கள்ளில் நாதனை வழிபட்டு **'முள்ளின் மேல் முதுகூகை முரலும் சோலை'** என்று தொடங்கும் பதிகம்பாடி கள்ளில் மேய அண்ணலைப் போற்றுகின்றார். **"கறைபெற்ற மிடற்றண்ணல் கள்ளில் மேயான் நிறைவேற்ற அடியார்கள் நெஞ்சுளானே"** என்றும். கள்ளில் பெருமானை ஏத்துவார் புகழோடும் பேரின்பத்தோடும் வாழ்வர் என்றும். அருளியுள்ளார். இங்கிருந்து பின் கண்ணப்பநாயனார் வழிபட்ட காளத்திமலை வணங்கச் சென்றதாக தெய்வச் சேக்கிழார் பெரியபுராணத்தில் பாடுகிறார். எனவே திருவெண்பாக்கம் தரிசித்து திருக்காளத்திமலை செல்லும் வழியில் திருக்கள்ளில் தரிசித்ததாக அறியமுடிகிறது.

திருஞானசம்பந்தர் இத்தலத்திற்கு வந்து இங்குள்ள குசஸ்தலை ஆற்றில் நீராடுவதற்கு முன் தமது பூசைப்பெட்டி. வீபூதிப்பை போன்றவைகளை கரையின் மீது வைத்து பின் அடியார்களோடு நீராடலுற்றார். சீர்காழியில் ஞானப்பாலைக் கொடுத்து. "தோடுடைய செவியன் விடையேறி ஓர் தூவெண்மதி சூடி காடுடைய சுடலைபொடி பூசி என் உள்ளம் கவர் கள்வன்." என்று பாட வைத்த அப்பரமன் கள்வனல்லவா? இங்கே திருஞானசம்பந்தப் பெருமானது பூஜைப் பெட்டியையும் திருநீற்றுப்பை முதலான சாதனங்களைக் கவர்ந்து அருகிலுள்ள கள்ளிக்காட்டில் லிங்க வடிவில் இறைவன் அமர்ந்துள்ள இடத்திற்கு வருகையில் இறைவனது அருகில் அந்த சிவ சாதனங்கள் உள்ளத்தைக் கண்டு கள்ளில் நாதன் திருவருளை வியந்து மகிழ்ந்து கள்ளில் அமர்ந்த கள்வனை பதிகம் பாடிப்பரவினார் என்று அறிய முடிகிறது.

கல்வெட்டுகள்

*இத்திருக்கோயிலில் **சோழர், பாண்டியர்,விஜய நகர அரசர்களின்** கல்வெட்டுகள் எட்டு உள்ளன. இவை மூலஸ்தான கருவறை, முன்மண்டபங் களின் அதிஷ்டானம் சுவர் பகுதிகளில் உள்ளன. சோழ மன்னர்கள் மூன்றாம் ராஜேந்திரன். மூன்றாம் ராஜராஜன். பாண்டிய மன்னன் சுந்தர பாண்டியன். விஜயநகர மன்னர்கள் வீரபிரதாப உடையார் அரியண உடையார் ஆகிய மன்னர்கள் காலத்தில் இக்கோயில் வழிபாட்டிற்குத் தரப்பட்ட நிலங்கள், அளிக்கப்பட்ட வரிவிலக்குகள் தொடர்பான செய்திகளைத் தெரிவிக்கின்றன.*

1. பாண்டிய மன்னன் சுந்தர பாண்டியனது 15வது ஆண்டில் (கி.பி. 1266 இல்) பொறிக்கப்பட்டது. நாட்டார் ஆணைப்படி தறி. செக்கு மீதான

அரசு வரிவருவாய்கள் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து புழற் கோட்டமான விக்கிரம சோழ வளநாட்டு கன்றிகை நாட்டு திருக்கள்ளினம் உடைய நாயனார்க்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

2. சோழ மன்னன் மூன்றாம் ராஜராஜனின் 18வது ஆண்டு (கி.பி. 1234) கல்வெட்டு. ஜயங்கொண்ட சோழ மண்டலத்து புழற்கோட்டமான விக்ரம சோழ வளநாட்டு கன்றிகைப் பேற்றூர் நாட்டு கனலூரான க்ஷத்திரிய சிகாமணி நல்லூர் ஊரைச் சேர்ந்தவர்கள். இவ்வூர் பெருமான் திருவீரட்டமுடைய நாயனார்க்குத் திருப்பள்ளியெழுச்சி அமுது செய்தருளுவதற்காக சோழ மண்டலத்து கங்கை கொண்ட சோழப்பாக்கத்துக் கங்கை கொண்ட சோளசுரமுடைய நாயனார் கோயிலில் உள்ள பணியாளர் பெற்றான் மகன் பாண்டியன் என்பார். "கண்ட கோபாலன் மாடை" என்ற காசு எட்டு பெற்றுக் கொண்டு இரண்டாயிரம் குழி நிலம் இறையிலி (வரியில்லாது) கொடுத்ததைக் கூறுகிறது. இந்நிலமும் இரண்டு பசுவும் கொடுத்து ஒவ்வொரு நாளும் திருப்பள்ளியெழுச்சியிலே "ஊர்காலாலே நான்கு நாழி அரிசியும், நாற்பலக் கறி அமுதும், உழக்காழாக்கு தயிரமுதும், ஒரு செவிடு நெய்யமுதும்" செய்வித்து இத்தருமம் நடைபெற்றதாக குறிப்பிடுகிறது.

3. சோழ மன்னன் மூன்றாம் ராஜராஜனின் 28வது ஆண்டு (கி.பி. 1244) கல்வெட்டு. ஜயங்கொண்ட சோழ மண்டலத்து பையூர் கோட்டத்துச் **சிறுவரன் பேட்டு*** மாப்பூதங்கிழவன் விசையராயன் வானோர் பெருமான் என்பவன் இதே மண்டலத்திலுள்ள புழற்கோட்டத்து திருக்கள்ளினத்து திருவீரட்டானமுடைய நாயனார்க்கு விளக்கு எரிவதற்காக ஒரு மாடை காசு கொடுத்தார் என்று குறிப்பிடுகிறது.

4. சோழ மன்னன் ராஜேந்திரனுடைய (1246-1279) கல்வெட்டு. இதனில் இவனது புகழ்பாடும் மெய்க்கீர்த்திப் பகுதியைத் தொடர்ந்து இவனது 29வது ஆண்டில் (1275) தொண்டை மண்டலத்து புழல் கோட்டத்து கண்டிகை பெற்றூர் நாட்டு கள்ளூரான க்ஷத்திரிய சிகாமணி நல்லூர் வல்லங்கிழான் பதினைந்து பேர் இவ்வூர் நாயனார் வீரட்டானமுடைய மகாதேவர்க்கு இரண்டு திருநந்தா விளக்கு எரிப்பதற்காக தொளாயிரத்து இருபது குழி நிலம் கொடுத்ததைக் குறிப்பிடுகிறது. இந்தத்தருமம் சந்திரசூர்யர் உள்ள வரை நடக்க வேண்டும் எனவும். இதனை விலக்கினார் யாராயினும் கங்கைக்

---

* தற்போது இவ்வூர் சிறுவரம்பெடு. சின்னம்பெடு என்று அழைக்கப்படுகிறது. அருணகிரியார் திருப்புகழ் பெற்ற திருத்தலம்.

கரையில் குராப்பசுவைப் கொன்ற பாவம் அடையும் என்று குறிப்பிட்டு "அரசன் அன்று கொல்லில் தெய்வம் நின்று கொல்லும்; அறமவற்க அற மல்லது துணையில்லை; அறமே துணை" என்று அற்புதமான பொன் மொழியும் குறிக்கப்பட்டுள்ளது.

5. பாண்டிய மன்னன் மாறவர்மன் பராக்ரம பாண்டியன் (கி.பி. 1300) காலத்துக் கல்வெட்டு. ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து புழல் கோட்டமான விக்ரம சோழ வளநாட்டு கன்றிகை நாட்டு திருக்கள்ளினம் ஆன க்ஷத்திரிய சிகாமணி நல்லூர் உடையார் திருக்கள்ளினமுடைய நாயனார் திருக்கோயிலுக்கு. கொல்லாப் பூண்டிச் சித்தப்ப நாயக்கர் என்பவர் அவரது பெயரால் "கண்டார்கண்டன்" என்றொரு வழிபாடு தொடங்கி தினம் அதற்கு நைவேத்யம் செய்ய நிலம் சர்வமானியமாகக் கொடுத்ததைக் குறிப்பிடுகிறது. நிலத்தின் நான்கு எல்லைகளும் குறிப்பிடப் பெற்று இந்நிலத்தில் வந்த முதல் கொண்டு தினமும் அமுதுபடி நடத்தவும் என்று தெரிவிக்கிறது.

6. பாண்டியர் மாறவர்மன் பராக்ரம பாண்டியன் காலத்து (கி.பி. 1300) கல்வெட்டு. திருக்கள்ளினமுடைய நாயனார்க்கு தேவதானம் கொடுத்ததையும் அந்நிலத்துக்கு வரிகள் நீக்கபட்டதையும் குறிப்பிடுகிறது.

7. விஜயநகர மன்னர் அரியன உடையார் காலத்து (கி.பி.1520) கல்வெட்டில் ஜயங்கொண்ட சோழ மண்டலத்து புழல் கோட்டத்து விக்ரம சோழ வளநாட்டு ஆற்றூர் நாட்டு உறைகாட்டு நந்திமங்கலக் கிழான் சூரிய தேவர் தொண்டைய தரையன் உடையார் என்பவர் இக்கோயில் பெருமான் பெயரில் நிலம் கொடுத்ததைத் குறிப்பிடுகிறது.

8. விஜயநகர மன்னர் வீரபிரதாபர் காலத்து (கி.பி. 1600) கல்வெட்டில் இவ்வூர் திருகள்ளினம் உடைய நாயனார்க்குச் சந்திரகிரியில் கரணிகர் (கர்ணம்) சந்திரசர் பேரனார் சோமரசர் கொடுத்த நிலம் பற்றி செய்தி உள்ளது.

இக்கோயில் கல்வெட்டுக்களில் இறைவன் திருவீரட்டான முடையர் என்று குறிக்கப்படுவது சிந்தித்தற்குரியது. சிவபெருமான் வீரச்செயல்கள் நிகழ்த்திய இடங்கள் எட்டு. அவை "அஷ்ட வீரட்டத்தலங்கள்" என்றழைக்கப் படுகின்றன. தொண்டை மண்டலத்திலும் சில வீரட்டானத் திருக்கோயில்கள் இருந்திருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

தினசரி வழிபாடும் திருவிழாக்களும்

இத்திருக்கோயிலில் திருப்பள்ளி யெழுச்சி வழிபாட்டிற்கு நிலம் கொடுத்ததையும் தினமும் அதற்கு அமுது செய்விக்க வேண்டிய முறையும் கல்வெட்டில் சிறப்பாகப் குறிப்பிட்டுள்ளதைக் கண்டோம். ஆனால் தற்போது இரண்டு காலபூஜை (காலையும் மாலையும்) மட்டுமே நடைபெற்று வருகின்றன.

காரனோடை சுப்பராய செட்டியார் என்னும் ஓர் சிவனடியார் உச்சிகாலபூஜை கட்டளை ஏற்படுத்தி நடத்தி வந்தார். தற்போது கடந்த 10 ஆண்டுகளாக நடைபெறவில்லை என்று அறியமுடிகிறது. இவ்வன்பரே இத்திருக்கோயிலுக்கு விநாயகர், சோமாஸ்கந்தர், பிரதோஷ நாயகர், தனிஅம்மன் ஆகிய ஐம்பொன் சிலைகளைச் செய்து காணிக்கையாக வழங்கியுள்ளார்.

தேவகோட்டை ராம.ராம.அரு. அரு.ராம அருணாசலம் செட்டியார் குடும்பத்தினர் 40 ஆண்டுகளாக தினசரி சாயரட்சை பூஜை கட்டளை ஏற்படுத்தி நடத்தி வந்தார்களாம். அதுவும் கடந்த 10ஆண்டுகளாக நடைபெறவில்லை.

நவராத்ரி, விஜயதசமி ஆகிய பத்து நாட்களும் தனி அம்மனுக்கு விசேஷ அபிஷேகம், அலங்காரம் நடைபெற்று வருகின்றன. விஜயதசமியன்று அம்மன் புறப்பாடு நிகழ்கின்றது. ஐப்பசி பௌர்ணமியில் அன்னாபிஷேகமும் ஸகந்தசஷ்டி ஆறு நாட்களும், கார்த்திகை சோமவாரம் மற்றும் கார்த்திகை தீபத்திரு விழாவும் நடைபெறுகின்றன. மார்கழி 30 நாட்களும் தினமும் விசேஷ அபிஷேகமும் திருவாதிரை உற்சவமும் நடைபெற உள்ளூர் கட்டளைதாரர்கள் உதவி வருகிறார்கள்.

இத்திருக்கோயில் அர்ச்சகர் **வெங்கல் சிவசாமி** ஆறுமுகக்குருக்கள் கடந்த 63 ஆண்டுகளாக இங்கு பூஜை செய்து வருகிறார். கும்பாபிஷேகம் நடைபெற்று நூறாண்டுகளுக்கும் மேலாகியுள்ள இக்கோயிலில் விரைவில் கும்பாபிஷேகம் நடைபெற்று பார்த்து மகிழ வேண்டும் என்பதை தம் வாழ்நாள் குறிக்கோளாகக் கொண்டுள்ளார். திருப்பணிகள் விரைவில் நடைபெற அன்பர்களை அணுகி ஆர்வமுடன் முயற்சித்து வருகிறார்.

திருப்பணிகள்

காஞ்சிமாமுனிவர் ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர சரஸ்வதி மகாசுவாமிகள் இத்தலத்திற்கு வருகை தந்து தரிசித்து மகிழ்ந்து ஆசி வழங்கியுள்ளார். இத்திருக்கோயில் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் பொன்விழா டிரஸ்டின் மூலம் மூலஸ்தான விமானத் திருப்பணியை செய்ய சுவாமிகள் ஆஞ்ஞாபித்துள்ளார்கள். திருப்பணி நடந்து வருகிறது. இவ்வூர் முக்கிய பிரமுகரும் திருப்பணிக்குழுத் தலைவருமான திரு கூ.மு. ராமசந்திரன், விநாயகர் கோயில் திருப்பணியைச் செய்து முடித்துள்ளார். காளத்திநாதர் சந்நிதி, திருக்கண்டலம் திரு கூ.சு. விநாயகப்பிள்ளை திரு. ராஜேந்திரன் அவர்களாலும், பால சுப்ரமண்யர் சந்நிதி திருப்பணி திருக்கண்டலம் திரு.க. நடராஜ முதலியார் அவர்களாலும், நிறைவு பெற்றுள்ளன. அம்பாள் சந்நிதி முகப்பு மண்டபம் திருப்பணி பெருமுடிவாக்கம் திரு. ஜெயராம் செட்டியார் அவர்களாலும் அம்பாள் சந்நிதி விமானம் திருப்பணி காரனோடை திரு மதுரை முத்துபிள்ளை அவர்களாலும் சண்டிகேச்வரர் சந்நிதி திருக்கண்டலம் திரு அ. மகாலிங்க முதலியார் அவர்களாலும் நடைபெற்றுள்ளன.

இன்னும் திருப்பணி ஆக வேண்டிய பகுதிகளாவன:-

உற்சவர் மண்டபம், சுவாமி சந்நிதி முன்புற மகாமண்டபம் மடைப்பள்ளி, கோபுரவாயில் (ராஜகோபுரம் புதியதாக எழும்ப வேண்டும்) மதில் சுவர், திருக்குளத்திருப்பணி, குருக்கள் இல்லம் முதலிய பணிகள் நடைபெற வேண்டியுள்ளன. நால்வர் சிலைகளைச் செய்து சந்நிதியை கட்ட **சிறுவாபுரி முருகன் அபிஷேகக் குழுவினர்** முன் வந்துள்ளார்கள்.

சுவாமி கருவறையைச் சுற்றிலும் வெளிப்புற கோஷ்டத்தில் **விநாயகர், தட்சிணாமூர்த்தி, மகாவிஷ்ணு, பிரம்மா, துர்கை,** ஆகிய சிலைகள் வைக்கப்பெற வேண்டும். இதில் தட்சிணாமூர்த்தி சிலைக்கு சென்னையைச் சேர்ந்த திருமதி. கௌரி அம்மாள் அவர்களும் துர்கை சிலைக்கு கோவையைச் சேர்ந்த திருமதி கருணாம்பாள் அம்மாள் அவர்களும் நன்கொடை அளித்துள்ளனர்.

பிற செய்திகள்

இத்தலத்தில் செல்லியம்மன் கோயில், சடையம்மன் கோயில், கோதண்ட ராமசாமி கோயில், பஜனை கோயில் ஆகியவையும், ஊருக்குத் தென்புறம் குசஸ்தலை ஆற்றின் கரையில்; லட்சுமி அம்மன் கோயிலும் உள்ளன.

இவ்வூரில் தபால் அலுவலகம், எட்டாவது வகுப்பு வரையிலான அரசினர் பள்ளிக்கூடம் முதலியன உள்ளன. கோயில் இருக்குமிடம் "மடவிளாகம்" என்றும் ஊர் "திருக்கண்டலம்" என்றும் தற்போது வழங்கப்படுகிறது. இவ்வூரில் மிகப் பெரிய ஏரி உள்ளது. வாழை, நெல் மற்றும் பயிர்வகைகள், பூச்செடிகள் முதலியன மிகுதியாகக் காணப்படுகின்றன. அருமையான இயற்கைச் சூழலில் அழகாகத் தோன்றும் இனியதலம் **"திருக்கண்டலம்"**. என வழங்கும் **"திருக்கள்ளில்"** ஆகும்.

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த

திருக்கள்ளில் தேவாரம்

பண் - வியாழக்குறிஞ்சி

முள்ளின் மேன் முதுகூகை முரலும் சோலை
வெள்ளின் மேல் விடுகூறைக் கொடி விளைந்த
கள்ளின்மே யஅண்ணல் கழல்கள் நாளும்
உள்ளுமேல் உயர்வெய்தல் ஒரு தலையே. 1

ஆடலான் பாடிலான் அரவங்கள் பூண்டான்
ஓடலாற் கருதாத கள்ளின் மேயான்
காடலாற் கருதார் கள்ளின் மேயான்
பாடெலாம் பெரியார்கள் பரசு வாரே. 2

எண்ணார்மும் மதில்எய்த இமையா முக்கண்
பண்ணார் நான் மறைபாடும் பரமயோகி
கண்ணார் நீ றணிமார்கன் கள்ளின் மேயான்
பெண்ணாணாம் பெருமான் எம் பிஞ்ஞகனே 3

பிறைபெற்ற சடை அண்ணல் பெடைவண்டாலும்
நறைபெற்ற விரிகொன்றைத் தார் நயந்த
கறைபெற்ற மிடற்றண்ணல் கள்ளின் மேயான்
நிறைபெற்ற அடியார்கள் நெஞ்சு ளானே. 4

விரையாலும் மலராலும் விழுமை குன்றா
உரையாலும் எதிர்கொள்ள ஊரார் அம்மாக்
கரையார்பொன் புனல்வேலிக் கள்ளின் மேயான்
அரையார் வெண் கோவணத்த வண்ணறானே. 5

நலனாய பலிகொள்கை நம்பான் நல்ல
வலனாய மழுவாளும் வேலும் வல்லான்
கலனாய தலைஒட்டான் கள்ளின் மேயான்
மலன் ஆயதீர்த்தெற்து மாதவத் தோர்க்கே. 6

பொடியார்மெய் பூசினும் புறவின் அறவம்
குடியா ஆர் திரியனுங் கூப்பிடினும்
கடியார் பூம் பொழிற்சோலைக் கள்ளின் மேயான்
அடியார் பண் பிகழ்வார்கள் ஆதர்களே. 7

திருநீர மலரொண்கண் டேவி பாகம்
புரிநூலும் திருநீறும் புல்கு மார்பில்
கருநீல மலர் விம்மு கள்ளில் என்றும்
பெருநீல மிடற்றண்ணல் பேணுவதே. 8

வரியாய மலரானும் வையம் தன்னை
உரிதாய அளந்தானும் உள்ளு தற்கங்
கரியானும் அரிதாய் கள்ளின் மேயான்
பெரியான் என் றறிவார்கள் பேசு வாரே. 9

ஆச்சியப் பேய்களோ டமணர் குண்டர்
பேச்சிவை வெறியல்ல பேறு மின்கள்
மாச்செய்த வளவயன் மல்கு கள்ளில்
தீச்செய்த சடையண்ண றிருந்தடியே. 10

திசைநான்கும் புகழ்காழிச் செல்வ மல்கு
பகல் போலும் பேரொளியான் பந்தன் நல்ல
முகைமேவு முதிர்சடையன் கள்ளில் ஏத்தப்
புகழோடும் பேரின்பம் புகுது மன்றே. 11

திருச்சிற்றம்பலம்.

திருமுறைத் தலங்கள் பதிகம்

திருவூறல் விளநகர் நெல்வேலி வலிதாயம்
சேய்ஞலூர் கொடுமுடி செங்குன்றூர் வியனூர்
கருவூர்ப் பாற்றுறை முக்கீச்சரம் **கள்ளில்**
கொள்ளிக்காடு கச்சிநெறடிக் காரைக்காடு வேற்காடு
திருஆவூர்ப் பசுபதீச் சரம்காட்டுப்பள்ளி
சிக்கல் சக்காப்பள்ளி அகத்தியான் பள்ளி
கரவீர நெல்வாயில் வல்ல முல்லை வாயில்
காறாயில் கொடுங்குன்றம் நெடுங்கள வக்கரையே

திருவருட்பா

நள்ளிப்பதியே நலந்தரும் என்றன்பர் புகும்
கள்ளிற்பதி நங் கடப்பாடே.

சிவாலய மான்மியக் கோவை

அண்ணலே அமுதே சிவாநந்த நாதா
ஆனந்த வல்லியை மணந்தோய்
புண்ணிய ரான பிருகுமுனி வணங்கிப்
பூசனை புரிந்திடும் கருத்தே
தண்ணிய செந்தா மரைமக ளுறைந்து
தங்கிய திருக்கள்ளில் வாழ்வே
திண்ணிய பெலனை எனக்கருள் புரிவாய்
செல்வமே கருணைவாரிதியே.

—அரித்வார மங்கலம் ப. சோமசுந்தரதேசிகர்
(கொட்டையூர் மஹாவித்வான் சிவக்கொழுந்து
தேசிகரவர்களின் தௌஹித்திரர்)

ஆனந்தவல்லியம்பிகை பதிகம்

சோதி யாருநின் கோயில் ஒருமுறைச்
சூழ்ந்த பேர்கள் இவ்வுலகினிற்
சொந்த நன்மனை பெண்டு பிள்ளைநிதி
சூழ வாழ்குவர், இருமுறை
நீதியோடு சூழ்கின்ற மக்கள் பெரு
நிதியரசுடன் வாழ்குவர்.
நிச்சலத்துடன் மும்முறை வலம்
நேர்மையோடு வரின்உல கெலாம்
பீதியற்றதோர் சக்ர வர்த்தியாய்
பேரரசுடன் வாழ்ந்து மேல்
பீடு பெற்றநற் குருவரு ளினாற்
பெருவர் பேரின்பம் இம்மையே
ஆதியந்த நடுவற்ற நின் பெருமை
அறிவினிற் சிறியன் பகர்வனோ
அந்தரத்தர் நிதம் வந்து போற்றும்ஆ
னந்த வல்லி என் அம்மையே.

பத்தியாக நின் கோயின் முன்னரார்
பரம தீர்த்த நின் றாடிநற்
பஞ்ச வக்கரம் ஓதிப் பூதிமயப்
பரம வைதிக முறையினில்
நித்தமும் அணிந்தக்க மாமணி
நீண்ட தோள் கழுத் தேந்தியே
நின் கழல்களை உள்ளிருத் திஉன்
நிகரிலாதபே ரருளினாற்
சித்தி முத்தியும் பெற்ற சிற்பர
தேசொளிர் பெரியோர் அடி
சிறியனேன் முடிக் கணிய தாக்கிலேன்
தேவி நீ கருணை செய்தருள்
அத்து வைதசிற் சத்வ ரூபியே
அறவிறந்த பல் கற்பமாய்
அந்தரத்தர் நிதம் வந்து போற்றும்ஆ
னந்தவல்லி என் அம்மையே.

– புலியூர் சிவராஜ சுவாமிகள்

ஸ்ரீ பாலசுப்ரமண்யர் துதி

நித்தமுற் றுனை நினைத்து மிக நாடி
நிட்டை பெற்றியல் கருத்தர் துணையாக
நத்தி உத்தம தவத்தின் நெறியாலே
லக்ய லக்கண நிருத்தம் அருள்வாயே
வெற்றி விக்ரம அரக்கர் கிளைமாள
விட்டநத் துகரனுக்கு மருகோனே
குற்றமற் றவர் உளத்தில் உறைவோனே
குக்குடக் கொடிதரித்த பெருமாளே.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

-அருணகிரிநாதர்.

சண்டேசுர நாயனார்

புண்ணியம் பாதக மாகப் போற்றிய
அண்ணலந் தக்கனார் அகத்து நாணிய
புண்ணியம் பாதகமாகப் போற்றிய
அண்ணலந் தண்டிதன் அடிகள் போற்றுவாம்.

நால்வர் துதி

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர் கோன் கழல் போற்றி!
ஆழிமிசைக் கன்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி!
வாழிதிரு நாவலூர் வன்தொண்டர் பதம் போற்றி!
ஊழிமலி திருவாத வூரர் திருத்தாள் போற்றி!

தக்ஷிணா மூர்த்தி

கல்லாலின் புடையமர்ந்து நான் மறை ஆ(று)
அங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமல் சொன்னவரை நினையாமல்
நினைந்துபவத் தொடக்கை வெல்லாம்.


வாழ்த்து

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளார்அடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

திருச்சிற்றம்பலம்.





திருப்பணி நடைபெற்றுவரும் திருக்கோயிலின் தோற்றம்



திருப்பணி குழுத்தலைவருடன் ஊர்மக்களும் சிவாசாரியாரும்



ஸ்ரீபிரதோஷ நாயகர்
(அருகில் புத்தக வெளியீட்டாளர் திரு: பெ.சு. சீனிவாசன்)